# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**40 |
| Name | : | **பாரிமன்னன் (காவல் ஆய்வாளர் )** |
| Father’s / Husband Name | : | **தங்கமணி** |
| Address | : | **விஜிலென்ஸ் பிரிவு, திருச்சி** |
| Age | : | 53/2025 |

**தேதி : 05.11.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.G. லோகநாதன் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர் இல்லை.

**முதல் விசாரணை**

நான் தற்போது விஜிலென்ஸ் பிரிவு, திருச்சியில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 27.07.2024ம் தேதி பெரம்பலூர் காவல் மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த புகார் மனுவில் நடப்பு தாள் சி.நம்பர். 1007/2024 மனுவை பெரம்பலூர் மாவட்ட குற்ற பிரிவு அலுவலக மனு எண் சி.நம்பர்.327/DCB/PLR/2024 மனுவின் மீது அப்போது பொறுப்பில் இருந்த அசோகன் காவல் உதவி ஆய்வாளர் மாவட்ட குற்ற பிரிவு குற்ற எண். 06/2024 பிரிவு 406, 417, 420 இதசவின்படி வழக்கு பதிவு செய்து வைத்ததை நான் முதலில் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மனுதாரரான சத்தியா க/பெ. வினோத்கண்ணன் என்பவரை அன்றைய தினமே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

மேலும் சாட்சிகள் அபிராமி, சாந்தி, ஆனந்தி, தங்கம், உமாமகேஷ்வரி, சூர்யா, காயத்திரி, சங்கீதா ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 35(3) BNSS ன்படி காவல் அழைப்பாணை

கொடுத்து செட்டிக்குளம் கிராமத்தை சேர்ந்த வசந்தி க/பெ. சத்தியன் என்பவர் விசாரணைக்காக மாவட்ட குற்ற பிரிவு அலுவலகத்திற்கு வந்தவரிடம் குற்றம் சம்மந்தமான காரணங்களை கூறி 27.07.2024ம் தேதி காலை 10.30 மணிக்கு கைது செய்து பின் அவரிடம் சாட்சிகள் பெருமாள், செந்தமிழ்செல்வன் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின் அன்றைய தினமே நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டது. மேற்படி ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின் இந்த வழக்கு சம்மந்தமாக மொத்தம் 17 வங்கிகள் வேண்டுகோள் கடிதம் கொடுத்து இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட ஆவணங்களை பெற்றேன். பின்னர் இவ்வழக்கின் எதிரி வசந்தி என்பவர் கணக்கு வைத்துள்ள வங்கியான Union Bank of India வேண்டுகோள் கடிதம் கொடுத்து அவரது பணபரிவர்த்தனை பட்டியலை பெற்றேன். **மேற்படி Union Bank of India செட்டிக்குளம் வங்கியின் பண பரிவர்த்தனை பட்டியல் (75 பக்கங்கள்) அ.சா.ஆ. 57 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு 30.07.2024ம் தேதி இவ்வழக்கு சம்மந்தப்பட்ட சாட்சிகளான ராஜம்மாள், ராணி, கலையரசி, தனம், மாரிக்கண்ணு, கௌசல்யா, லெட்சுமி, சித்ரா, விக்கேனஷ்வரி, மஞ்சுளா, தனலெட்சுமி, மகாலெட்சுமி, தாமரைசெல்வி, குப்புமணி, தேன்மொழி, வாசுகி, சசிகலா, மணிமேகலை, மகேஷ்வரி, அமுதா, வளர்மதி, மல்லிகா, மஞ்சுளா, கற்பகம், தர்சனா, செல்வி, மற்றும் விஜயா ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு அன்றைய தினமே இவ்வழக்கை பதிவு செய்த திரு. அசோகன் உதவி ஆய்வாளர் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் புகார்தாரர் திருமதி.சத்தியா என்பவரிடமிருந்து ரூ.1,15,100/– மற்றும் பாதிக்கப்பட்ட 35 நபர்களிடமிருந்து ரூ.35,45,525/– எதிரி ஏமாற்றியுள்ளார். பின் காயத்திரி என்பவரிடமிருந்து 3 கிராம் தங்க நகையும், மகாலெட்சுமியிடமிருந்து 8 கிராம் தங்க தோடு மற்றும் மோதிரம் தங்க நகையும்

திரும்ப கொடுக்காமல் சாட்சிகளிடமிருந்து பெற்ற பணத்திற்கு மாத தவணை தொகையை கட்டாமலும், ஏமாற்ற வேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன் நம்பிக்கை மோசடி செய்த எதிரியின் மீது கடந்த 01.08.2024ம் தேதி சட்டப்பிரிவுகள் 406, 417, 420 இதசவின்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் 27.07.2024ம் தேதி புகார்தாரர் சத்தியா மட்டும் கொடுத்துள்ளார். மேற்படி சத்தியா தனது புகாரில் எனக்குட்பட மக்களுக்கு பணம் வாங்கி ஏமாற்றியது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். புகாரில் தனியாக பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கடந்த 27.07.2024ம் தேதியே எதிரி சத்தியாவுக்கு BNS பிரிவு 35(3) காவல் அழைப்பாணை கொடுத்து விசாரித்தேன். மேற்படி அழைப்பாணையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கின் சாட்சி 2 முதல் 38 வரையுள்ள நபர்கள் என்னிடம் தனியாக புகார் எதுவும் எதிரியின் மீது கொடுக்கவில்லை. காவல் கண்காணிப்பாளர் பெரம்பலூர் அவர்களிடம் 26.07.2024 ம் தேதி கொடுக்கப்பட்ட புகாரினை 27.07.2024ம் தேதி வழக்கு பதிவு செய்து விசாரணை செய்தேன்.

மேற்படி வழக்கில் புகார்தாரர்மற்றும் சாட்சிகள் தாங்கள் எந்த நிதி நிறுவனத்தில் கடன் பெற்று அத்தொகையினை எதிரிக்கு வங்கி மூலம் பரிவர்த்தனை செய்தேன் என சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சாட்சிகள் பணம் பெற்று எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்பட்ட நிதி நிறுவனங்களின் மேலாளரையோ அல்லது ஊழியர்களையோ இவ்வழக்கில் சாட்சியாக நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரி கணக்கு வைத்துள்ள வங்கியான Union Bank of India செட்டிக்குளம் வங்கியின் மேலாளரிடம் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பமிட்ட பெருமாள், செந்தமிழ்செல்வன் ஆகியோர்கள்

இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சாட்சிகளின் கணவர் மற்றும் உறவினர் என்றால் சரிதான்.

மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் எனது காவல் நிலையத்தில் வைத்துதான் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் எதிரி உங்களிடம் தன்னிச்சையாக தரவில்லை என்றாலும் நீங்களே தயார் செய்துகொண்டீர்கள் என்றால் சரியல்ல. கடந்த 30.07.2024ம் தேதி நீங்கள் விசாரித்த சாட்சிகள் அனைவரும் நீங்கள் வாக்குமூலத்தில் பதியப்பட்ட கொடுத்ததாக சொன்ன தொகைக்கும், நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தபோது கொடுத்ததாக தொகைக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் சாட்சிகள் அனைவரும் எதிரியிடம் வரவு, செலவு கணக்கு பழக்கம் உண்டு. ஏற்கெனவே வரவு, செலவு செய்துள்ளார் என கூறியுள்ளார் என்பது எனக்கு தெரியாது. இந்த வழக்கில் சாட்சிகள் மகாலெட்சுமி, காயத்திரி இருவரும் எதிரியிடம் நகைகள் கொடுத்ததாக சொல்லியுள்ளார்கள். நீங்கள் நகையை கைப்பற்றியுள்ளீர்களா என்றால் இல்லை.

இந்த வழக்கில் எதிரியிடமிருந்து எந்தவித தொகையும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரி புகார்தாரர் மற்றும் சாட்சிகளிடம் ஏமாற்றவேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன் வரவு செலவு வைக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சம்பவம் 2014 லிருந்து 2024 வரை நடைபெற்றதாக வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எங்கள் காவல்நிலையத்தில் 2023க்கு முன்பாக எந்தவிதமான புகாரும் சம்பவம் தொடர்பாக பெறப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நீங்கள் குற்றபத்திரிக்கையில் சொல்லப்பட்டுள்ளது போல கெட்ட எண்ணத்துடன் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் புகார்தாரரை ஏமாற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் அவர்களிடமிருந்து தொகையை பெறவில்லை, எதிரி சரியான முறையில் வாங்கிய கடனுக்கு தவணை செலுத்திவந்துள்ளார்என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் எதிரியின் மீது தவறாக குற்றச்சாட்டு பதிவுசெய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் புகார்தாரர்மற்றும்

சாட்சிகளால் சொல்லப்பட்ட எதிரியின் மாமனாரின் உடல்நிலை சரியில்லை என்பதையும், அவரது தங்கை கர்ப்பம் கலைந்த காரணத்தினாலும், கணவரின் போட்டோ ஸ்டூடியோ மற்றும் மருத்துவ செலவிற்காக பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளார்கள். நீங்கள் மேற்படி எதிரியின் மாமனார், அவரது தங்கை மற்றும் கணவர் ஆகியோர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.